# தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மு.க.ஸ்டாலின் நாளை சிங்கப்பூர் பயணம்

**சென்னை, மே.22–**

**தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, 2 நாள் பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை (செவ்வாய்க்கிழமை) சிங்கப்பூர் செல்கிறார். தொடர்ந்து, ஜப்பானும் செல்ல இருக்கிறார்.**

தமிழகத்தில் கடந்த 2021ம் ஆண்டு முதலமைச்சராக பொறுப்பேற்ற திலிருந்து மு.க. ஸ்டாலின், தொழில் துறையை முன்னெடுத்து செல்வதில் அதிக அக்கறை காட்டி வருகிறார்.

பதவி ஏற்ற உடனேயே அவர், 2030 ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு தமிழகத்தின் பொருளாதாரத்தை உயர்த்த இலக்கு நிர்ணயித்து இருப்பதாக தெரிவித்தார். இந்த நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான குழு துபாய், அபுதாபி நாடுக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக சென்றது.

அப்போது 6 தொழில் நிறுவனங்களுடன் ரூ.6 ஆயிரத்து 100 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன் மூலம் 14,700 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் வரை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க 207 நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

இதில், 111 தொழில் நிறுவனங்கள் இதுவரை தொடங்கப்பட்டு, ரூ.13 ஆயிரத்து 726 கோடி அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. 15 ஆயிரத்து 529 பேருக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில், தமிழகத்தில் அடுத்த ஆண்டு (2024) ஜனவரி மாதம் 10, 11 ஆகிய தேதிகளிவல் உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த இருக்கிறது. இதில், 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து முதலீட்டாளர்கள் கலந்து கொள்வார்கள் என்று ஏற்கனவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருக்கிறார்.

### சிங்கப்பூர் பயணம்

இதற்கிடையே, 2 நாள் பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை (செவ்வாய்க்கிழமை) தொழில் துறை அதிகாரிகளுடன் சிங்கப்பூர் செல்ல இருக்கிறார். அங்கு 24ந்தேதி (நாளை மறுநாள்) நடைபெறும் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் அவர் கலந்து கொள்ள இருக்கிறார்.

இந்த மாநாட்டில், சிங்கப்பூர் இந்திய தொழில் மற்றும் வர்த்தக சபை உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள். முன்னதாக, தொழில் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா நேற்று சென்னையில் இருந்து விமானம் மூலம் சிங்கப்பூர் சென்றார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகையையொட்டி, அவர் முன்னேற்பாடுகளை செய்ய இருக்கிறார்.

சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு, அங்கிருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

அங்கும் தொழில் முதலீட்டாளர் களை சந்தித்து, தமிழ்நாட்டுக்கு தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுக்க இருக்கிறார்.



பப்புவா நியூ கினியா நாட்டில் பேசப்படும்


# ‘டோக் பிசின்’ மொழியில் திருக்குறள்: பிரதமர் மோடி வெளியிட்டார்

**போர்ட், மே 22–**

**‘டோக் பிசின்’ மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் பதிப்பை பிரதமர் மோடி வெளியிட்டார்.**

பிரதமர் மோடி, தனது ஜப்பான் பயணத்தை முடித்து விட்டு, நேற்று இரவு பசிபிக் தீவு நாடான பப்புவா நியூ கினியா சென்றடைந்தார்.

பப்புவா நியூ கினியா நாட்டுக்கு முதல் முறையாக பயணம் மேற்கொண்டு இருக்கும் பிரதமர் மோடிக்கு அந்நாட்டு பாரம்பரிய வழக்கப்படி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின் பிரதமர் மோடியை பார்த்த அந்நாட்டு பிரதமர் ஜேம்ஸ் மராபே, சட்டென பிரதமர் மோடி காலில் விழ முயன்றார். அவரை தடுத்த பிரதமர் மோடி, மராபேவின் முதுகில் தட்டியபப்டி அவரை எழுப்பினார். வரவேற்புக்கு பின் மோடி, ஜேம்ஸ் மராபேவை சந்தித்தார். அப்போது பப்புவா நியூ கினியாவில் பேசப்பட்டு வரும் ‘டோக் பிசின்’ மொழிக்கு மாற்றப்பட்ட திருக்குறள் பதிப்பை மோடி வெளியிட்டார்.



இது குறித்து, பிரதமர் மோடி தனது சமூக வலைத்தளத்தில் தமிழில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:–

பப்புவா நியூ கினியாவில், டோக் பிசின் மொழியில் திருக்குறளை வெளியிட்ட பெருமை எனக்கும் பிரதமர் ஜேம்ஸ் மராப்பேவிற்கும் கிடைத்தது. குறள் ஒரு தலைசிறந்த படைப்பு, இது பல்வேறு துறைகளில் மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகிறது.

குறளை டோக் பிசின் மொழியில் மொழி பெயர்க்க எடுத்த முயற்சிக்காக மேற்கு புதிய பிரிட்டன் மாகாண கவர்னர் மற்றும் சுபா சசீந்திரன் ஆகியோரைப் பாராட்டுகிறேன் என கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து பப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மராபேவுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தையின் போது, இருதரப்பு உறவுகள் மற்றும் பல்வேறு விஷயங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. இரு நாடுகள் இடையே வர்த்தகம், முதலீடு, ஆரோக்கியம், திறன் மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம் என்று பல்வேறு பிரிவுகளில் உறவை பலப்படுத்துவது குறித்து இருநாட்டு தலைவர்கள் பேசினர். பேச்சுவார்த்தையின் போது பிரதமர் மோடி, பிரதமர் ஜேம்ஸ் மராபேவுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டு அதனை தனது அதிகாரப்பூர்வ டுவிட்டரில் பதிவிட்டார்.

2014 ஆண்டு பிஜிக்கு சென்றிருந்த பிரதமர் மோடி இந்திய பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்திய பசிபிக் பகுதிகளில் சீனா தனது ராணுவ பலத்தை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வரும் சூழலில், இந்திய பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டம் பப்புவா நியூ கினியாவில் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.





## ரூ.25 லட்சத்தில் சோலார் மின்நிலையம்: அமைச்சர் சேகர்பாபு திறந்துவைத்தார்

# சூரிய மின் சக்தியில் முழுமையாக இயங்கும் வடபழனி முருகன் கோவில்

**சென்னை, மே.22**

**வடபழனி முருகன் கோவிலில் ரூ.25 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள சோலார் மின்நிலையத்தை அமைச்சர் சேகர்பாபு திறந்து வைத்தார்.**

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள வடபழனி முருகன் கோவில் வளாகம் முழுவதும் ரூ.25 லட்சம் மதிப்பில் 50 கிலோ வாட் திறன் கொண்ட 75 சோலார் மின் தகடுகள் கொண்ட சோலார் மின்நிலையம் திறப்பு விழா, கந்தர் அனுபூதி மண்டபத்தில் நேற்று நடந்தது.

இதனை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். அறநிலையத்துறை கமிஷனர் முரளிதரன், கோவில் தக்கார் எல். ஆதிமூலம், எம்.எல்.ஏ.க்கள் வேலு, கருணாநிதி, சிட்டி யூனியன் வங்கி தலைவர் காமகோடி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் அமைச்சர் சேகர்பாபு நிருபர்களிடம் கூறியதாவது:–

ஓரிரு நாட்களுக்கு முன்பு 48 முதுநிலை கோவில்களின் பிரசாதங்கள் நாடு முழுவதும் தபால் மூலம் அனுப்பும் திட்டமும், 50 கோவில்களின் அன்றாட பூஜைகள், இந்து சமயத்தை சார்ந்த அனைத்து சொற்பொழிவுகளையும் அனைவரும் கேட்கும் வகையிலான ‘திருக்கோவில்’ என்ற செயலி திட்டம் தொடங்கப்பட்டது. அதனை தொடர்ந்து தற்போது வடபழனி முருகன் கோவிலில் சோலார் மின்நிலையம் ரூ.25 லட்சத்தில் அமைக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கோவிலின் முழு மின்சார தேவையையும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சோலார் மின் சக்தி மூலம் பெறப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கோவில் முழுவதுக்கும் சூரிய மின் சக்தி மூலம் மின்சார தேவை பூர்த்தி செய்யும் முதல் கோவிலாக வடபழனி முருகன் கோவில் உள்ளது. மதியம் கோவில் நடை மூடப்பட்ட பிறகு உற்பத்தியாகும் மின்சாரம் கோவிலுக்கு பயன்படுத்த வாய்ப்பில்லை.

எனவே இந்த மின்சாரம், மின்சார வாரியத்துக்கு வழங்கப்படும். அதன் மூலம் வருமானம் கிடைக்கிற வகையி லான கட்டமைப்பை உருவாக்கி இருக்கிறோம். படிப்படியாக அனைத்து கோவிலிலும் சோலார் மின் சக்தி நிலையம் நிறுவப்படும்.

கோவிலில் தரிசனம் செய்ய வரும் 60 வயதை கடந்தவர்களுக்கு தனி வரிசை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வடபழனி முருகன் கோவிலில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்காமல் விரைவாக சாமி தரிசனம் செய்வதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும்.

இன்று (அதாவது நேற்று) ஒரு நாள் மட்டும் ‘திருக்கோவில்’ செயலி மூலம் 65 பேர் பிரசாதம் கேட்டு விண்ணப்பித்துள்ளனர். வரும் காலங்களில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். இந்த திட்டத்தை கண்காணிக்க கூடுதல் கமிஷனர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

### மின்சார கட்டணம் ரூ.5 லட்சம் சேமிப்பு

இந்த சோலார் மின் சக்தி நிலையம் நாளொன்றுக்கு 150 முதல் 165 யூனிட் வரை மின்சாரத்தை சூரிய ஒளி மூலம் உருவாக்கி கொடுக்கிறது. கோவிலில் பகலில் பயன்படுத்தப்படும் அனைத்து மின்சார தேவைகளுக்கும் இந்த சோலார் மின் நிலையம் மூலம் மின்சாரம் பெற முடியும். இதன் மூலம் கோவிலுக்கு மாதம் ரூ.38 ஆயிரத்து 550 வீதம் ஆண்டுக்கு ரூ.4.50 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை மின்சார கட்டணம் சேமிக்க வாய்ப்பு உள்ளது.

பகலில் கோவில் நடை சாற்றும் நேரமான பகல் 12.30 மணி முதல் மாலை 4 மணி வரை கோவிலில் மின்சாரம் பயன்படுத்தப்படாத நேரத்தில் உற்பத்தியாகும் சூரிய ஒளி மின்சாரம் ஒரு நாளைக்கு சுமார் 120 யூனிட் வரை மின்சார வாரியத்துக்கு விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதத்துக்கு சுமார் ரூ.10 ஆயிரம் வரை கோவிலுக்கு வருமானம் வரப்பெறும் என்று அறநிலையத்துறை அதிகாரிகள் கூறினார்கள்.

# ஜம்முவில் கட்டப்பட்டுள்ள திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஜூன் 8ந் தேதி கும்பாபிஷேகம்

ஜம்மு, மே.22–

ஜம்முவில் கட்டப்பட்டுள்ள திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஜூன் 8ந்தேதி கும்பாபிஷேகம் நடை பெறுகிறது.

திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் பல ஊர்களிலும் சீனிவாச திருக்கல்யாண வைபவம் நடத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக, திருப்பதிக்கு வந்து ஏழுமலையானை தரிசிக்க முடியாத பக்தர்களின் வசதிக்காக மற்ற ஊர்களிலும் ஏழுமலையானுக்கு கோவில்கள் அமைக்கும் பணியை திருப்பதி தேவஸ்தானம் தொடங்கி உள்ளது. அந்த வகையில் ஜம்முவில் திருப்பதி தேவஸ்தானம் சார்பில் ஏழுமலையானுக்கு பிரமாண்ட கோவில் அமைக்கப்பட்டு வருகிறது. ரூ.30 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் இக்கோவிலின் கும்பாபிஷேக விழா ஜூன் 8ந் தேதி நடைபெற உள்ளது. இந்த புதிய கோவில் ஜம்முவில் உள்ள புகழ் பெற்ற வைஷ்ணவி தேவி கோவிலுக்கு மிக அருகில் அமைந்துள்ளது.

ஆந்திராவுக்கு வெளியே திருப்பதி ஏழுமலையானுக்கு கட்டப்படும் 6வது கோவிலாக ஜம்முவில் புதிய கோவில் உருவாகி வருகிறது. ஏற்கனவே ஐதராபாத், சென்னை, கன்னியாகுமரி, டெல்லி, புவனேசுவரம் ஆகிய நகரங்களில் திருப்பதி ஏழுமலையானுக்கு திருப்பதி தேவஸ்தானம் சார்பில் கோவில் கட்டப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக மும்பை, ராய்ப்பூர், ஆமதாபாத் ஆகிய நகரங்களிலும் திருப்பதி ஏழுமலையானுக்கு பிரமாண்ட கோவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

ஜம்முவில் மாதா வைஷ்ணவி தேவியை தரிசிக்க வரும் பக்தர்களின் முக்கிய வழிபாட்டு தலமாக திருப்பதி ஏழுமலையான் கோவில் அமையும். இந்த கோவில் கட்டுவதற்காக ஜம்மு அரசு 62 ஏக்கர் நிலம் ஒதுக்கி உள்ளது. திருமலையில் நடப்பது போலவே அனைத்து சடங்குகள், பூஜைகள், விழாக்கள் உள்ளிட்டவைகள் இந்த புதிய கோவிலிலும் நடத்தப்படும்.

கோவிலுடன் சேர்த்து உப தெய்வங்களின் சன்னதிகள், மடப்பள்ளி, அன்னபிரசாத கவுண்ட்டர்களும் கட்டப்பட்டு வருகிறது. வாகன நிறுத்தும் இட வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. கும்பாபிஷே கத்தையொட்டி அங்குரார்ப்பணம் உள்ளிட்ட சடங்குகள் ஜூன் 4ந் தேதி முதல் தொடங்கும். ஜூன் 8ந் தேதி முதல் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

# 2,000 ரூபாய் நோட்டை நாளை முதல் மாற்றலாம்; அடையாள அட்டை தேவையில்லை: எஸ்பிஐ

## ரிசர்வ் வங்கி வழிக்காட்டுதல்கள் வெளியீடு

**புதுடெல்லி, மே.22–**

**2,000 ரூபாய் நோட்டுகளை நாளை முதல் மாற்ற அடையாள அட்டை தேவையில்லை என்று பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.**

2,000 ரூபாய் நோட்டுகள் வாபஸ் பெறப்படுவதாக கடந்த 19ந் தேதி ரிசர்வ் வங்கி அறிவித்தது. செப்டம்பர் 30ந் தேதிக்குள், அந்த நோட்டுகளை வங்கி கணக்கில் செலுத்தலாம் அல்லது வேறு நோட்டுகளாக மாற்றிக்கொள்ளலாம் என்று கூறியது. ஒருவர் ஒரே நேரத்தில் ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள நோட்டுகளை மாற்றலாம் என்று தெரிவித்தது.

ரூபாய் நோட்டு மாற்றும் பணி நாளை தொடங்குகிறது. அதை அறியாமல் 20ந் தேதியே ஏராளமானோர் வங்கிகளை முற்றுகையிட்டனர். அவர்களுக்கு வங்கி அதிகாரிகள், விவரத்தை எடுத்துச் சொல்லி அனுப்பிவைத்தனர்.

சில வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தும் எந்திரம் மூலம் 2,000 ரூபாய் நோட்டுகளை தங்கள் வங்கி கணக்கில் செலுத்தினர்.

வேறு சிலர், 2,000 ரூபாய் நோட்டுகளை பயன்படுத்தி தங்கம், வைர நகைகளை வாங்கினர். இருப்பினும் ரூ.20 ஆயிரம் மதிப்புக்கு மேற்பட்ட நோட்டுகளுக்கு ‘கே.ஒய்.சி.’ விவரங்களை நகைக்கடை அதிபர்கள் பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையில், பாரத ஸ்டேட் வங்கி, தனது அனைத்து சரக உள்ளூர் தலைமை அலுவலகங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பி உள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–

2,000 ரூபாய் நோட்டுகளை மாற்றிக்கொள்ள வங்கிகளில் உரிய ஏற்பாடுகளை செய்வதுடன், பொதுமக்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அதன்மூலம் பொதுமக்கள் சுமுகமாக, இடையூறின்றி மாற்றிக்கொள்வார்கள்.

ஒரே நேரத்தில் ரூ.20 ஆயிரம் வரை மாற்றிக்கொள்ள அடையாள ஆவணமோ, வேண்டுகோள் சீட்டோ தேவையில்லை. ஒருவரே எத்தனை தடவை வேண்டுமானாலும் வரிசையில் வந்து ஒரு தடவைக்கு ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### வழக்கமான நடைமுறை

இதுகுறித்து ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது, ரூ.2,000 நோட்டுகளை திரும்பப் பெறும் நடவடிக்கை வழக்கமான நடைமுறைதான்.

ரூ.1,000, ரூ.500 நோட்டுகள் வாபஸ் பெறப்பட்டதால் உடனடி தேவைக்காகவே ரூ.2,000 நோட்டுகள் வழங்கப்பட்டன. உயர்மதிப்புள்ள ரூ.2,000, ரூ.500 நோட்களில் பாதுகாப்பு அம்சங்களில் எந்த குறைபாடும் இல்லை. 2000 ரூபாய் நோட்டுகளை மாற்ற மக்கள் அவசரப்பட வேண்டாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### வாடிக்கையாளர்களுக்கு குடிநீர், இடவசதி

2,000 ரூபாய் நோட்டு மாற்றம் தொடர்பாக வங்கிகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது. அதில், ரூ.2,000 நோட்டு மாற்ற வரும் வாடிக்கையாளர்களுக்கு போதுமான குடிநீர், கோடை வெயில் என்பதால் நிழலில் உரிய இட வசதி உள்ளிட்டவற்றை செய்து தர வேண்டும். தினமும் எவ்வளவு ரூ.2,000 நோட்டுகள் மாற்றப்படுகின்றன என்பது குறித்த தகவல்களை முறையாக சேகரிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


**பெயர் மாற்றம்**

Ashwak Nausheen Siddique Basha பிறந்த தேதி:01.03.2011, நெ. 18/9, தட்டான் மாலை தெரு, சின்ன நாதம், செங்கல்பட்டு – 603002, தமிழ்நாடு, இந்தியா, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **ASHWAQ NAUSHEEN SIDDIQUE BASHA** என்று அழைக்கப்படுகிறாள்.

Siddique Basha (தந்தை)

**IN THE VI ADDL.CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S.No. 5302 of 2022**

**The Jammu & Kashmir Bank Ltd, Rep. by its Branch Manager .... Plaintiff**
Vs.
**M/s.Heritage Group, Rep.by its partners And others ....Defendants**

**To**

**1. M/s.Heritage Group,** Rep. by its partners, Shop No.6, Century Plaza, No.560, Anna Salai, Teynampet, Chennai-600018

**2. M/s Asif Ashraf Bhat Partner of M/s. Heritage Group S/o. Mohd Ashraf Bhat** C/o Shop No.6, Century Plaza, No.560, Anna Salai, Teynampet, Chennai-600018

**3. Mr. Ghulam Nabi Mir Partner of M/s Heritage Group S/o Mr. Haji Mohd Mir** C/o Shop No.6, Century Plaza No.560 Anna Salai, Teynampet, Chennai-600018.

My client has filed the above suit against all of you for recovery of money. The Hon'ble VI Addl. City Civil Court at Chennai was pleased to order notice to all of you returnable by 27.4.2021. Take notice that the above suit will be listed before the Hon'ble VI Addl. City Civil Court at Chennai on 13.6.2023 and all of you are hereby directed to appear before the Hon'ble Court in person or through advocate failing which the matter will be decided in your absence.

**Sd/- S.JULIAN Selvam**
**Counsel for Plaintiff**

**JMJ பின்டெக் லிமிடெட்**

(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்)

எண். 17/9, லட்சுமிபுரம் மெயின் தெரு, லாயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600014.
Email: investor@jmjfintechltd.com | Website: www.jmjfintechltd.com | Ph. No. : 7395922291/92
CIN : L51102TN1982PLC009711

31.03.2023 முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கை

ரூ. லட்சத்தில்

| விவரங்கள் | முடிந்த 3 மாதங்கள் | | | முடிந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2023 | 31.12.2022 | 31.03.2022 | 31.03.2023 | 31.03.2022 |
| | (குறிப்பை சரிபார்க்கவும்) | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை செய்தது) | (தணிக்கை செய்தது) | (தணிக்கை செய்தது) |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 77.889 | 274.843 | 18.670 | 382.294 | 63.500 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 31.555 | 16.907 | -18.440 | 98.366 | 4.850 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 31.555 | 16.907 | -18.440 | 98.366 | 4.850 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 16.300 | 13.607 | -3.640 | 83.111 | 4.850 |
| நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/நஷ்டம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது | 16.300 | 13.607 | -3.640 | 83.111 | 4.850 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1240.00 | 1240.00 | 1240.00 | 1240.00 | 1240.00 |
| பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன் (ஒவ்வொன்றும் ரூ.10/–)) | | | | | |
| அடிப்படை | 0.131 | 0.110 | -0.029 | 0.54 | 0.039 |
| பலமிழந்தது | 0.131 | 0.110 | -0.029 | 0.54 | 0.039 |

குறிப்பு:

1. மேலே உள்ள முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு மற்றும் பரிந்துரை செய்யப்பட்டு, மே 20, 2023 அன்று நடைபெற்ற குழு கூட்டத்தில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் கம்பெனியின் சட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டது.
2. ஏப்ரல் 01, 2017 முதல் இந்திய கணக்கியல் தரநிலைகளை (Ind AS) நிறுவனம் ஏற்றுக்கொண்டது. மேலும் இந்த நிதி முடிவுகள் நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 133 மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற கணக்கியல் கொள்கைகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015 (Ind AS) ஆகியவற்றின் படி தயாரிக்கப்பட்டுள்ளன.
3. செபி சுற்றறிக்கை CIR/CFD/CMD /15/ 2015 தேதி 30 நவம்பர் 2015ஆல் பரிந்துரைக்கப்பட்ட தணிக்கை செய்யப்படாத காலாண்டு முடிவுகளின் வடிவம் ஜூலை 5, 2016 தேதியிட்ட செபி சுற்றறிக்கையின் தேவைகளுடன், Ind AS மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013ன் அட்டவணை iiiக்கு இணங்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
4. கம்பெனி நிதி என்ற ஒரே ஒரு அறிக்கை தாக்கல் செய்யும் வணிகத்தில் மட்டுமே ஈடுபட்டுள்ளது.
5. நடப்புகால ஒப்பீடுக்காக எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கடந்த கால கணக்குகள் ரீ குரூப் மற்றும் மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
6. பிரிவு 115BAA இன் புதிய ஆட்சியை நிறுவனம் ஏற்றுக்கொண்டதால் தற்போதைய வரியில் MAT சேர்க்கப்படவில்லை

**குழுவின் ஆணைப்படி**
**JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்/– ஜோஜு மடத்தும்பாடி ஜானி**
**நிர்வாக இயக்குனர்**
**DIN:02712125**

**இடம்: சென்னை**
**தேதி: 20.05.2023**